REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 29உ வியாழன் (12—7—56) ★ ★ வெளியூர்: ஆனி 30உ வெள்ளி (13—7—56) [இதழ் 24

விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க 'விசேட வரி' விதிக்கும் விந்தை!

நாட்டின் விடுதலைக்காக அல்ஜீரியா மக்கள் போராட்டம் நடத்திவருகின்றனரல்லவா? அவ்விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கான போராட்டத்தை நடத்துவதற்கு உதவியாக வருமான வரியை 10 சதவிகிதம் உயர்த்துவதற்கு பிரெஞ்சு பார்லிமெண்டின் ஒப்புதலைப் பெறுவதென பிரெஞ்சு மந்திரி சபை தீர்மானித்திருக்கிறதாம்! இந்த வருமான வரி உயர்வு அசாதாரணமானதோர் நடவடிக்கையென்றும், 1956ல் மட்டுமே இது அமுலில் இருக்குமென்றும் சர்க்கார் பிரதிநிதியொருவரால் விளக்கம் வேறு தரப்பட்டுள்ளது!

காங்கிரஸ்கட்சிக்குள் 'அதிகாரகுத்துச்சண்டை'

நகர காங்கிரஸ் மீது பிரதேச காங்கிரஸ் பாய்ச்சல்!

தேர்தலுக்கு அபேட்சகர்களை நியமிப்பதில் போட்டாபோட்டி

பி. கா. நியமன அபேட்சகர்களை ந. கா. நியமன அபேட்சகர்கள் எதிர்க்கும் விசித்திரம்

ஜெயபூர் காங்கிரசின் மீது நடவடிக்கை

இராஜஸ்தான் பிரதேச காங்கிரசிற்கும் ஜெயபூர் நகர மாவட்ட காங்கிரசிற்கும் 'அதிகார குத்துச் சண்டை' ஏற்பட்டு இருக்கிறது.

ஜெயபூர் நகராட்சி மன்றத்திற்கு நடைபெற வேண்டிய தேர்தலுக்கு, காங்கிரஸ் கட்சியின் சார்பில் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும் அதிகாரம் யாருக்கு என்பதை நிர்ணயிப்பதில் இதர அமைப்புகளுக்கு இடையிலும் தகராறு ஏற்பட்டுவிட்டது.

குறிப்பிட்ட தினத்திற்குள்ளாக அபேட்சகர்களைப் பொறுக்கி எடுத்துத் தனது ஒப்புதலுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என இராஜஸ்தான் பிரதேச காங்கிரஸ் ஜெயபூர் நகர மாவட்ட காங்கிரசுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தது.

ஆனால் ஜெயபூர் நகர காங்கிரசோ, குறிப்பிட்ட தினத்திற்குள்ளாக அபேட்சகர் பட்டியலை பிரதேச காங்கிரசின் ஒப்புதலுக்கு அனுப்பத் தவறியதுடன், அபேட்சகர்களை நியமிக்கும் அதிகாரம தனக்கேதான் உண்டு என்றும், அதற்கு பிரதேச காங்கிரசின் ஒப்புதல் தேவையற்றதென்று வாதிக்கவும் தொடங்கிவிட்டது.

பிரதேச காங்கிரஸ் சீற்றங் கொண்டு, கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்த ஜெயபூர் காங்கிரஸ் குழுவைக் கலைத்துவிட்டது.

சிக்கல் அந்த அளவுடன்—அதாவது, இரு அமைப்புகளுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்குடன் நின்றுவிடுவதாக இல்லை.

ஜெயபூர் நகர காங்கிரஸ் குழு, அதன் தலைவராக உள்ள முதல் மந்திரியின் சொல்லையே உதறித்தள்ளக்கூடிய நிலையையும் பெற்று இருக்கிறது.

ஜெயபூர் நகர காங்கிரஸ் பொறுக்கி எடுத்த 40 [illegible] சகர்களும், பிரதேச காங்கிரஸ் நியமித்[illegible] அபேட்சகர்களும், தேர்தலில் ஒரு[illegible] எதிர்த்துப் போட்டியிடுகின்றனர்.

நகர [illegible]ஸ் நியமித்த அபேட்சகர்களை வாபஸ் பெற்றுக் கொள்ளுமபடி நகர காங்கிரஸ் தலைவராக உள்ள முதல் மந்திரி வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோளை ஏற்கமுடியாது—கூடாது என நகர காங்கிரஸ் குழு பிடிவாதம் பேசி வருகிறது

எனவே, தலைவருக்கும் ஜெயபூர் நகர காங்கிரஸ் குழுவிற்குமே இப்பொழுது பிணக்கு ஏறபட்டு விட்டிருககிறது.

காங்கிரஸ் கட்சியின் 'அதிகார குத்துச்சண்டை' இந்த நிலையில் இருந்து வருகிறது!

'சர்வாதிகாரம்' நிலை பெற வேண்டுமாம்!

ஜனநாயகத்தைப் பழிக்கிறார் சென்னை நிலவரி அமைச்சர்

அம்பாசமுத்திரம், சூலை 1—"வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படை கொண்ட ஜனநாயகத்தைவிட ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு சர்வாதிகாரம் நிலைபெறுமானால், இந்தியா பயனடைய முடியும்," என்று, சென்னை நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் கூறினாராம்.

'ஜனநாயகத்தில், ஆக்க வேலைகள் தாமதப்படுகின்றன,' என்றும் அவர் குறைபட்டுக் கொண்டாராம்!

இத்தோடு அவர், 'தட்சிணப் பிரதேசம் வேண்டும் என்ற கோரிக்கை தேவையே இல்லாதது—வேண்டாதது' என்றும் கருத்தறிவித்தார்.

இது உண்மைதானா?

புதுடில்லி, சூலை 11—

ஐ. நா. பாதுகாப்பு சபையில், காஷ்மீர் பிரச்சினை பரிசீலனைக்கு வரும் நேரத்தில், காஷ்மீரில் குழப்பமும் கலவரமும் விளைவிப்பதற்குப் பாகிஸ்தான் சர்க்கார் ஒரு 'சதித்திட்டம்' உருவாக்கியிருப்பதாக 'ஆசாத் காஷ்மீர்' பகுதியிலிருந்து தகவல் கிடைத்திருப்பதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

இனியும் டில்லி ஏமாற்றுமா?

நெய்வேலி பரிசோதனைகள் வெற்றி

நிலக்கரிப் படிவங்களுக்கு அடியில் உள்ள நீரோட்டம் கட்டுப்படுத்தப்படக்கூடியதே!

சென்னை, சூலை 12—

"நெய்வேலியில் நீர் இறைக்கும் சோதனைகள், நிலக்கரிப் படிவங்களுக்குக் கீழே உள்ள நீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளன" என்று, நெய்வேலி திட்டத்திற்கான நிபுணர்களின் நிரந்தரக் கமிட்டி கருத்தறிவித்துள்ளது.

'சோதனைகள் நடத்தப்பட்டதின் நோக்கம் வெற்றிகரமாக ஈடேறியுள்ளது' என்றே அவர்கள் கூறியிருக்கின்றனர்.

மேலும் இது போன்று நடத்தப்படவிருக்கிற சோதனைகளின் அடிப்படையில் நிலக்கரி தோண்டும்போது, நீர் இறைத்துக் கொண்டே இருப்பதற்கான வழிமுறைகள் முடிவு செய்யப்படும் என்றும், சுரங்கம் தோண்டுவதற்கான இயந்திர சாதனங்கள் கிடைத்தவுடன் சுரங்க வேலைகள் தொடங்க முடியும் என்றும், சுரங்க இயந்திரங்கள் சப்ளை செய்வதற்கான 'டெண்டர்'கள் இப்போது பரிசீலனையிலிருப்பதாகவும் தெரியவருகிறது.

மலாயா பல்கலைக் கழகம்: இந்தியக் கல்விப் பிரிவு துவக்கம்

தலைவராக தமிழர் ஒருவர் நியமனம்

சென்னை சர்க்கார் கலைக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகவுள்ள திரு. எம். இராசாக்கண்ணு அவர்கள், மலாயா பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்வித்துறையின் தலைவராக நியமனம் பெற்றுள்ளார் என்ற மிக மகிழ்ச்சிக்குரிய செய்தி கிடைத்திருககிறது.

மலாயா சர்க்கார், சென்னை சர்க்காருடன் இந்த நியமனத்திற்கான ஏற்பாட்டினைச் செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

மலாயா பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்விப் பிரிவு இந்த ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் துவங்கவிருக்கிறது.

இந்தப் பிரிவில், இந்திய கலாச்சாரம், மொழிகள் கற்றுத்தரப்படும் என்றும், குறிப்பாகத் தமிழ் மொழி, கலாச்சாரம் இவை குறிப்பிடத்தகுந்த இடம் பெறும் என்றும் தெரியவருகிறது.

ஐயாயிரம் டன் அரிசி

பாகிஸ்தானுக்குக் கடனாக இந்தியா தரக்கூடும்

கிழக்கு பாகிஸ்தானில் இப்போது உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியான நிலையைச் சமாளிப்பதற்காக பாகிஸ்தானுக்கு 5,000 டன் அரிசியைக் கடனாகத் தருவதற்கு இந்தியா ஒப்புக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தறிகளை பதிவு செய்து கொள்ள வேண்டும்

டில்லியின் புதிய உத்தரவு

சென்னை, சூலை 11—

கைத்தறி வைத்துக்கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் தங்கள் தறியை 'ரிஜிஸ்தர்' செய்துகொண்டு 'ரிஜிஸ்திரேஷன் சர்டிபிகேட்' வாங்கவேண்டும் என்று விதிக்கும் உத்தரவு ஒன்றை டில்லி சர்க்கார் பிறப்பித்திருக்கிறார்களாம்.

நெசவாளர்கள், முதலீடு நெசவாளர்கள், கைத்தறித் தொழிற்சாலை அதிபர்கள் எல்லாம், தறிகள் அமைத்துள்ள பிரதேசத்திற்கான கூட்டுறவு உதவிரிஜிஸ்திரார்களுக்கு மனுசெய்து கொள்ள வேண்டும்.

மனு நமூனாக்கள், ரிஜிஸ்திராரிடம் கிடைககும்.

'1956 மே 8-ந்தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், அல்லது செப்டம்பர் 7-ந் தேதிக்குள் ஜவுளிக் கமிஷனர் அறிவிக்கிறபடி தறிகள் பதிவு செய்யப்பட வேண்டும்; பதிவிற்காக கட்டணம் எதுவும் வாங்கப்பட மாட்டாது' என்று உத்தரவு கூறுகிறது.

பதிவு செய்யும் அதிகாரி கேட்கிற விபரங்களை தறிக்காரர்கள் கூறவேண்டும்.

கைத்தறியைப் பொறுத்து ஏதேனும் புத்தகங்கள், தஸ்தாவேஜுகள் இருக்குமானால் அவையும் அதிகாரியிடம் தரப்படவேண்டும்.

தறிகளுக்கு வரிசைக் கிரமமாக எண் குறிக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். பதிவுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள காலவரையறையிலிருந்து 30 நாட்களுக்குள் புதுப்பித்தல் நடைபெற வேண்டும். பதிவு செய்யும்போது தறியைப் பற்றி தவறான விவரங்கள் தரப்படுமானால், பதிவு செய்யும் அதிகாரி பதிவுச் சீட்டை ரத்து செய்ய முடியும்.

இந்த உத்தரவை எவரேனும் மீறுவதாக பதிவு செய்யும் அதிகாரி சந்தேகப்பட்டால், சந்தேகத்திற்குக் காரணமான இடத்தைச் சோதனையிட அதிகாரிக்கு உரிமை உண்டு என்றும் உத்தரவு கூறுகிறது.

ஆயுதப் பரிசோதனையை நிறுத்துக'

வல்லரசுகளுக்குக் கியூரி வேண்டுகோள்

பாரிஸ், சூலை 9—

'அணு ஆயுதப் பரிசோதனைகளையும், மேற்கொண்ட ஆராய்ச்சிகளையும் நிறுத்துவதற்காக இங்கிலாந்து—அமெரிக்கா—ரஷ்யா ஆகிய நாடுகள் ஓர் ஒப்பந்தத்துக்கு வர வேண்டும்' எனக்கோரி, புகழ் பெற்ற மருத்துவ அறிஞரும் உலக சமாதானக் கவுன்சிலின் தலைவருமான ஜூலியட் கியூரி வல்லரசுகளுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாராம்.

பெண்களே உள்ள பஞ்சாயத்துக் கழகம்!

ஆந்திராவின் சரித்திரத்தில் முதலாவதாகுமாம்

ஆந்திராவின் சரித்திரத்திலேயே—ஒருக்கால் இந்தியாவின் வரலாற்றிலேயே முதல் தடவையாக பஞ்சாயத்துக் கழகம் ஒன்றை பெண்களே நிர்வகிக்கவிருக்கின்றனர்!

நெல்லூருக்கு அருகிலுள்ள வாவேரு கிராம வாக்காளர்கள், பெண்களை மட்டுமே கொண்ட பஞ்சாயத்துக் கழகத்தைத் தங்கள் கிராமத்தில் ஏற்படுத்தியுள்ளனர்.

பஞ்சாயத்துக் கழகத்தின் எட்டு இடங்களுககும், எட்டுப் பெண்மணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நம் நாடு
தி.மு.க.தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 12—7—'56 வியாழன்

அவர்களும் இவர்களும்!

இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்றுவரும் ஆட்சி முறை குடியரசு எனக் கூறப்படுகிறது. அதில் இணைந்துள்ள மாகாணங்கள் அனைத்தும் ஒரேவகையான அரசியல் அந்தஸ்தைக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதை வரையறுத்துக் கூற ஒரு அரசியல் சட்டம் வேறு இருந்துவருகிறது.

ஏட்டிலும் எழுத்திலும் மாகாணங்களின் இச்சம அந்தஸ்து ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், செயலளவில் இந்தி மொழி வழங்கும் மாகாணங்களே, மற்ற மொழி வழங்கும் மாகாணங்களின்மீது வரைகடந்த ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலையில் உள்ளன.

இந்தி மொழி வழங்கும் பகுதிகளான உத்தரப் பிரதேசமும் பீகாரும் இட்டதே சட்டமென இந்திய அரசியலில் இருந்து வருகின்றன. ஆட்சித்துறையளவுடன், அவ்விரு இந்தி மொழி மாகாணங்களின் ஆதிக்கம் கட்டுப்பட்டுவிடுவதில்லை.

அனைத்திந்திய அமைப்பான காங்கிரஸ் கட்சியின் கொள்கை, கோட்பாடு, செயல்முறைத் திட்டம் ஆகிய எதுவும், அவ்விரண்டு இந்தி மொழி மாகாணங்களின் தலையீடும் ஒப்புதலும் இல்லாது உருவெடுப்பது கிடையாது. அவ்விரண்டும் நீங்கலாக மற்ற மாகாணங்களின் குரல் ஆட்சித் துறையில் ஒலிக்கப்படாதது போன்றே, காங்கிரஸ் கட்சிக்குள்ளும் மதிப்புப் பெறுவது அறவே கிடையாது.

காங்கிரஸ் நடைமுறையை நிர்ணயிப்பதிலும், ஆட்சிப் போக்கை வரையறுப்பதிலும் இந்தி மொழி மாகாணங்கள் உச்சநிலையில் இருப்பதுபோலவே, தொழில் துறையில் ஆதிக்கம் செலுத்துவதில் பணம் படைத்த பனியாவும், குஜராத்தியும் இரண்டாவது பட்சமாக இருந்து வருகின்றனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் மேற்கூறிய உண்மையை வலியுறுத்தப் போதுமான சான்றுகளாகும்.

இன்றுள்ள அரசியல் சட்டப்படி, குடியரசுத் தலைவராகவும், பிரதமராகவும் வருகின்றவர்கள், இந்தி மொழி வழங்கும் மாகாணத்தைச் சார்ந்தவர்களாகவே என்றென்றைக்கும் இருக்க முடியும் என்ற நிலை இருந்துவருகிறது. இந்த உண்மையை சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்களே சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இந்தி மொழி வழங்கும் பகுதி நீங்கலாக மற்ற மொழி வழங்கும் பகுதியினர் எவரும் பிரதமராகவும், குடியரசுத் தலைவராகவும் வருவதற்குரிய வாய்ப்புக்கு இடமில்லாதவகையிலேயே அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது மேற்குறிப்பிட்ட உண்மையில் விளக்கமாகிறது. பொதுவாக இந்தி மொழி வழங்கும் பகுதியினரும், குறிப்பாக அம்மொழிவழி வந்தத் தலைவர் எனப்படுகிறவர்களும், மற்ற மொழிவழியினரை மதிக்கும் தன்மையும், மற்றவர்களுடன் சமமாக அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் உள்ள மனப்போக்கின் நிலையும், இந்த இலட்சணத்தில் இருந்து வருகின்றன.

காங்கிரஸ் மேலிடத்தின் கருத்தாக உருவெடுத்து இந்திய அரசாங்க முத்திரை பெற்று மசோதா உருவம் பெற்றுள்ள நில மாற்ற மசோதாவை, ஒரு திருத்தத்தை நிறைவேற்றுவதின் மூலம், பீகார் சட்டசபை உடைத்தெறிந்து விட்டது.

பீகாரிலுள்ள வங்கமொழி வழங்கும் பகுதியான ஏறத்தாழ 3,200 சதுரமைல் நிலப் பரப்பை மேற்கு வங்காளத்துடன் இணைத்துவிட பீகார் உடன்பட வேண்டும் என்பதே நிலமாற்ற மசோதாவின் உள்ளடக்கமாகும்.

பீகாரில் உள்ள வங்கமொழிப் பகுதி மேற்கு வங்காளத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதேயாகும். இந்தச் சாதாரண நியாயத்தை ஒப்புக் கொள்ளக்கூட இந்தி வழங்கும் பகுதியான பீகார் சட்டசபைக்கு மனமில்லை. எனவே, மசோதாவையே உதறித் தள்ளிவிட்டிருக்கிறது.

இதுபோன்ற நில மாற்ற மசோதாக்கள் தொடர்புடைய சட்டசபைகளில் விவாதிக்கப்பட்ட நேரத்தில், அனைத்திந்திய காங்கிரஸ், அந்தந்த சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு வெளியிட்ட கண்டிப்பான கட்டளைகளையும், அவைகளுக்குக் கட்டுப்பட்டு உறுப்பினர்களும், அமைச்சர் அவையினரும் நடந்து கொண்ட போக்கினையும், பீகார் சட்டசபை நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் காங்கிரஸ் கட்சிக்குள் பீகாருக்குள்ள செல்வாக்கின் முழு உருவத்தை ஒருவரால் புரிந்துகொள்ளுவது சாத்தியமாகும்.

மசோதாவை எதிர்த்து காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் வாக்களிக்கக்கூடாது எனவும், மூலக் கருத்துக்கு மாறான திருத்தங்கள் கொண்டுவரக் கூடாது எனவும், அனைத்திந்தியக் காங்கிரஸ் ஏற்கனவே மற்ற மாகாணங்களுக்குக் கட்டளை பிறப்பிததிருந்தது. அக்கட்டளைக்குக் கீழ்ப்பட்டே மற்ற மாகாண சட்டசபைகளில் காங்கிரஸ் நடந்து கொண்டு இருக்கிறது.

அக்கட்டளைக்கு அடங்கியே சென்னை சட்டசபையிலும், மசோதாவிற்கு எதிராகத் தேவிகுளம் பீர்மேடு பிரச்சினையை மீண்டும் கிளப்பாது காங்கிரஸ் உறுப்பினர்கள் வாய் மூடிகளாக இருந்துவிட்டனர். இந்திய அரசாங்கம் அளித்த அநீதிக்கு சென்னை காங்கிரஸ் சட்டசபை அடிபணிந்துவிட்டது.

ஆனால், பீகாரோ?

நிலமாற்ற மசோதாவைத் தூக்கி எறிந்துவிட்டது!

அனைத்திந்தியக் காங்கிரசின் கண்டிப்பான கட்டளைகளை காலில் போட்டு மிதித்துவிட்டது பீகார் சட்டசபை!

அதுவுமன்றி, பீகார் சட்டசபையின் முடிவுக்கு மதிப்பளித்து நிலமாற்ற மசோதாவைக் கைவிடாது மேலும் சட்டமாக்க இந்தியப் பேரரசு பிடிவாதம் காட்டுமானால், பீகார் காங்கிரஸ் அமைச்சர் அவை உட்பட காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் பதவியைத் துறந்துவிடத் தயாராக இருப்பதாகவும் அச்சுறுத்தப்பட்டிருக்கிறது. இவ்வகையில் எதிர்க்கட்சியினரும் காங்கிரஸ் போக்கை முழுமனதுடன் ஆதரிப்பவர்களாகவே உள்ளனர்.

அதுவுமல்லாமல், கல்கத்தா நகரை இந்தியப் பேரரசின் நேரடியான ஆட்சியின்கீழ்க் கொண்டு வரவேண்டும் எனவும், மேற்கு வங்காளத்தை இரண்டாகப் பிளந்து ஒரு பகுதியை அசாம் மாகாணத்துடனும், மற்றொரு பகுதியை பீகாருடனும் இணைத்துவிடவேண்டும் எனவும் பீகார் சட்டசபையில் உறுப்பினர் ஒருவரால் 'ஆய்வுரை' கூறப்படும் அளவிற்கு, இந்தி மொழி வெறியர்களின் வெறித்தன்மை முற்றிப்போய் இருக்கிறது.

வங்காளி மொழியும், வங்காளி என்ற வமசா வழியினரும், வங்காளம் என்ற சிறு நிலப் பரப்பும்கூட இல்லாமல் அழித்துக் கட்ட வேண்டும் என்ற மனப்போக்கும் பீகாரில் இருந்து வருகிறது என்பதற்கு மேற்படி உறுப்பினரின் ஊளை ஒரு எடுத்துக்காட்டாகும்.

பீகாரிலும் காங்கிரஸ் அமைச்சர் அவைதான் இருக்கிறது. சென்னையிலும் காங்கிரஸ் கட்சிதான் கோலோச்சுகிறது. ஆனால், இரண்டுக்கும்உள்ள அந்தஸ்து பேதம், அதனதன் நடைமுறையிலிருந்து வெட்ட வெளிச்சமாகிறது. 'அவர்களும் இவர்களும்' ஒரு அரசியல் அமைப்பில் இருக்கிறவர்கள்தான். இருந்தும் என்ன பயன்?

அவர்கள் ஆதிக்க வெறி கொண்டவர்களாக இருக்க, இவர்கள் தங்களுடைய நியாயமான உரிமையையும் [illegible] கொடுக்கும் ஏமாந்த [illegible] கிரிகளாகக் காட்சி அளிக்கின்றனர்! அந்தோ! பரிதாபம்!!

கருணை மனு நிராகரிப்பு

சைகோன், சூலை 9—

தென் வியட்நாம் குடியரசுத் தலைவர் தீன்-தியெம், ஹோவா ஹாவ் 'புரட்சி' இயக்கத் தலைவர்களுள் ஒருவரான பா-கத், தனக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனையை ரத்து செய்யுமாறு கோரிச் செய்திருந்த கருணை மனுவை நிராகரித்து விட்டார் என்று தெரியவருகிறது.

இன்னும் இரண்டு நாட்களில் பா-கத் சுட்டுக்கொல்லப்படுவாராம்.

தோல், நார்த் தொழில் வளர்ச்சிக்கு உதவி

புதுடில்லி, சூலை 12—

தோல் தயாரிப்புத் தொழில், நார் உற்பத்தித் தொழில் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக அகில இந்திய கதர் கிராம கைத்தொழில் போர்டுக்கு மத்திய சர்க்கார் மொத்தம் ரூ. 20,81 000 வழங்கியுள்ளது. ஆந்திரா, டில்லி மாநிலங்களுக்குக் கடனாகவும், மானியங்களாகவும் உதவி அளிக்கப்படும்.

'தி. மு. கழகம்தான் சரியான எதிர்க்கட்சி'

'காமராசரால் சகித்துக் கொள்ள முடியாத எதிர்க் கட்சி'

சான்று தேடித் தருகிறார் சம்பத்

'கைதட்டலும் வாழ்த்தும் காலித்தனமாகுமா?'

'தேனீ'ச் சம்பவம் மறந்தா போய் விட்டது?

சென்னை—ஆழ்வார்பேட்டை தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் துவக்கப்பகுதி நேற்றுத் தந்திருந்தோம்; தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது:—

"திராவிட முன்னேற்றக் கழகம் இதுநாள்வரையில், நாட்டு மக்களிடத்தில் இலட்சிய விளக்கம் பேசிக்கொண்டிருந்தது. இன்று, சட்டசபையில் நுழைந்து, 'நாம் யார்—என்ன சொல்லுகிறோம்' என்பதை உலகுக்கு அறிவிக்க வருகிறது.

"நமது இந்த முடிவு குறித்து, காமராசர் பேசும்போதெல்லாம், 'ஜனநாயக ஆட்சிக்கு எதிர்க் கட்சி தேவைதான்; ஆனால் இவர்கள் எப்படி எதிர்க் கட்சியாவது?' என்று பேசுகிறார்.

"எதிர்க் கட்சி என்றால், காமராசருக்கு உடன்பாடானவர் என்ற பொருள் இருக்க முடியாது. வேறுபட்டக் கொள்கையுடையவர்கள் தான் எதிர்க் கட்சியினராக இருக்க முடியும். அந்த எதிர்க்கட்சி காமராசரின் விருப்பத்திற்கு உகந்ததாக இருக்க முடியாது. இவர் பெற்று வளர்த்து ஆசி கூறி உருவாக்கும் பிள்ளையல்ல, எதிர்க்கட்சி என்பது!

"'இவர்கள் எப்படி எனக்கு எதிர்க் கட்சியாகவிருப்பது?'—என்று கேட்டால், என்ன பொருள்?

"'இவரோடு சண்டை போட்டு எப்படி நான் ஜெயிப்பேன்?'—என்று, எந்தப் பயில்வானும் குஸ்தியின்போது கேட்பதில்லை. 'நான் இன்னவருடன் தான் சண்டை போடுவேன்; இன்னவருடன் போடமாட்டேன்'—என்று எந்தப் பயில்வானும் அறிவிக்க மாட்டானே, சாதாரண குஸ்திச் சண்டையில்கூட! 'எவருடன் வேண்டுமானாலும் சண்டையிடத் தயார்' என்றுதானே பயில்வான்கள் கூறுவர்?

'ஆனால், காமராசர், 'இவர்க[illegible] நான் எப்படிச் சண்டை [illegible]?' என்று பேசுகிறார்.

"'பி[illegible]லிஸ்டுகள்—பரவாயில்லை; சோ[illegible]—பரவாயில்லை; கம்யூனிஸ்டுகள்—அவர்களும் பரவாயில்லை; திராவிடர் கழகம்—அவர்களும் பரவாயில்லை; ஆனால், இவர்கள் எப்படி எதிர்க்கட்சியாவது? நான் எப்படி வாழ்வது?'—என்று பேசுகிறார், காமராசர்!

"'பி. சோ. கட்சி பரவாயில்லை' என்று காமராசர் கருதுவதற்குக் காரணம், நரேந்திர தேவா என்று ஒரு தலைவர் இருந்தார்; அவர் இப்போது இல்லை! ஜெயப் பிரகாஷ் என்று ஒருவர் இருந்தார்; அவரும், இப்போது, தனக்கும் அரசியலுக்கும் சம்மந்தமில்லை என்று கூறிவிட்டார்! அசோக் மேத்தா என்றொரு விளக்கு—பி. சோ. மாளிகையில் மினுக்கு மினுக்கென எரிந்துகொண்டிருக்கிறது; அதுவும் சீக்கிரமே 'அணைந்து' விடும் என்று கூறுகின்றார்கள்! 'இந்த நிலையிலிருக்கும் பி. சோ. எதிரியாயிருந்தால் பரவாயில்லை'—என்று பேசுகிறார், காமராசர்!

"கம்யூனிஸ்டுகள் பரவாயில்லை என்பதற்குக் காரணம் என்ன? அவர்கள், 'காங்கிரசிற்கு வலது காலை மண்டியிட்டுச் சலாம் போடுவதா? இடது காலை மண்டியிட்டுச் சலாம் போடுவதா?'—என்று, அண்மையில் பாலக்காட்டில் கூடி மூன்று மணி நேரம் விவாதித்து, 'இரண்டு காலையுமே மண்டியிட்டுச் சலாம் போடலாம்' என்ற முடிவுக்கு வந்திருக்கின்றனர்; அதனால் தான், 'அவர்கள் பரவாயில்லை' என்று காமராசர் கூறுகிறார்.

"திராவிடர் கழகம் என்றாலோ—'அனுபபவம் பெற்ற தலைவர் இருந்தபோதிலும், நாம் சொன்னால் கேட்பார்கள்' என்று காமராசர் கருதுகிறார்போலும்!

"இப்படி, 'எல்லாக் கட்சிகளும் பரவாயில்லை; இந்த தி. மு. கழகம் தான்.....?' என்று காமராசர் நினைத்துப் பேசுவதற்குக் காரணம், தி. மு. கழகம்தான், காங்கிரசை எதிர்ப்பது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

"தி. மு. கழகம்தான் இன்று சரியான எதிர்க் கட்சியாக—காமராசரால் சகித்துக்கொள்ள முடியாத எதிர்க் கட்சியாக இருக்கிறது.

"தி. மு. கழகம்தான் சரியான எதிர்க்கட்சியாக இருக்க முடியும் என்பதற்கு, இந்த நாட்டு முதலமைச்சரே, தன்னால் சகித்துக் கொள்ள முடியாது என்று கூறுவதே போதுமானதாகும்; இதைவிட வேறென்ன நற்சான்று வேண்டும்?

"நாம் எதிர்க்கட்சியாக அமர்ந்தால் காமராசரால் சகித்துக் கொள்ள முடியாது என்ற நிலை இருப்பதால், இப்போதிருந்தே இவர், கழகத்தைப் பற்றி மக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்ப முற்பட்டிருக்கிறார்.

"[illegible]கத்திற்கு என்ன தெரியும்? இவர்கள் [illegible] திட்டம் ஏதேனும் உண்டா? இவ[illegible] காலித்தனம் செய்யத்தானே தெரியும்?'—என்றெல்லாம் பேசிவருகிறார்.

"இப்படி இவரது தரங்கெட்ட பேச்சுக்கெல்லாம், நாம் பதில் சொல்ல வேண்டியதில்லைதான் என்றாலும், இவர் அடைத்துக் கொண்டிருக்கிற இடத்திற்கு ஒரு 'தரம்' உண்டு என்பதால், அந்த 'தர'மான இடத்திலிருந்து கொண்டு இவர் பேசியிருப்பதினால் அவற்றிற்கும் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

"ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தைக் குறிப்பிட்டு, அதில் தி மு கழகத்தினர் கலாட்டா செய்தனர்—காலித்தனம் செய்தனர்' என்று பேசியிருக்கிறார், காமராசர்!

"ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற அந்த விவகாரத்திற்குரிய கூட்டம் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

"பொதுவாக ராஜாஜி மண்டபத்தில் கூட்டம் நடைபெற்று, அக்கூட்டத்தில் கவர்னரோ, மந்

(4-ம் பக்கம் பார்க்க)

சிறைக்கூடங்களில் அம்பர் சர்க்கா!

கைதிகள் நூற்கத் திட்டம்

சென்னை சர்க்கார் நிலை என்ன?

சென்னை சூலை 12—

சென்னை மாநிலத்தில் சில சிறைச்சாலைகளில் அம்பர் சர்க்காவை அமுலுக்குக் கொண்டு வரும் பிரச்சினையைப் பற்றி சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றனர்.

கை நூற்பும், சாதாரண சர்க்காவினால் நூற்பதும் சென்ற வருடம் சில சிறைகளில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

சென்னை நகரம், வேலூர், கோயமுத்தூர், சேலம், மதுரை, கண்ணனூர் சிறைகளில் உள்ள கைதிகள் சர்க்காவினால் நூற்கின்றனர். இது சம்பந்தமாக ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் ஒரு பயிற்றுவிப்பவர் என்ற அளவில், 6 பயிற்றுவிப்பவர்கள் நியமிக்கப்படுவார்களென்று கூறப்படுகிறது.

தனது பங்கான 22 000 அம்பர் சர்க்காக்களில், சென்னை சர்க்கார், சுமார் 3 000 அம்பர் சர்க்காக்கள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது.

கல்வி இலாகாவின் 'போர்க்கோலம்'

'மொழி வெறி'யின் எதிரொலி

கொழும்பு, சூலை 12—

சிங்களப் பாட வகுப்புக்களை நிறுத்திவிட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பள்ளிகளுக்கு, சர்க்கார் மானியத்தை நிறுத்திவிடப்போவதாக, அப்பள்ளிகளுக்கு இலங்கை கல்வி மந்திரி பயமுறுத்தல் கடிதங்களை அனுப்ப ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சிங்கள வகுப்புகள் நிறுத்தப்பட்டால், சர்க்கார் மானியம் நிறுத்தப்படும் என்ற விலகாரத்தைத் தெரிவிக்கும் சுற்றறிக்கைகளை கல்வி இலாகா அதிகாரபூர்வமாக அனுப்பிவைக்குமாம்.

அரசாங்கத்தின் கீழுள்ள பள்ளிகள், சர்க்கார் உத்தரவின்றி சிங்கள வகுப்புகளை நிறுத்த முடியாது எனவும் கல்வி இலாகா கருதுகிறது.

'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி' என்ற மசோதா நிறைவேறியதிலிருந்து தமிழ்ப் பகுதி பள்ளிகள் சிங்கள வகுப்புகளை நிறுத்தியுள்ளன.

வடநாடு, தென்னாட்டை அடிமை கொள்ளும் அடிப்படை புரியவில்லையாம்

அரசியல் சட்டப்படி இந்தியைப் புகுத்துவது அரசாங்கத்தின் கடமையாம்

இந்திப் பிரச்சாரகரின் கூற்று

ஐதராபாத், சூலை 12—

"ஒரு சாரார் ஆங்கிலத்தை உடனடியாக நீக்கிவிட வேண்டுமென்றும், இந்தி மொழியை ஆங்கிலத்திற்குப் பதிலாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறுகின்றனர். இவர்கள் இந்தியை உடனேயே அரசாங்க மொழியாக்க விரும்புகின்றனர்.

"இந்தி மொழியைத் தேசீய மொழியாக்க வேண்டுமானால் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அத்தீர்மானத்தை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு அதனை நிறைவேற்றப் பாடுபடவேண்டும்; பெரும்பான்மையோரின் பலத்தினாலும், விவாதத்தாலும் மட்டுமே எக்காரியத்தையும் சாதித்துவிட முடியாது.

"இந்தி மொழியை எதிர்க்கும் மற்றொரு சாரார் தமிழ் நாட்டு மக்கள்; 'இந்தியைத் தேசீய மொழியாக்குவதால் தீங்கு நேரிடும்' என்று இவர்கள் கூறுகின்றனர்.

"வடநாட்டுப் பண்பாடு வேறு—தென்னாட்டுப் பண்பாடு வேறு; எனவே, வடநாட்டுடன் இணைந்து வாழ விரும்பவில்லையென்று இவர்கள் கூறுகின்றனர். இவ்விதம் கூறுவோரின் தொகை நாளுக்குநாள் பெருகி வருவதாகக் காணப்பட்ட போதிலும் இவர்கள் தொகை மிகச் சிறியதே. வடநாடு தென்னாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தியதில்லையெனச் சரித்திரம் வாயிலாக நாம் அறிவோம். இருந்தாலும் வடநாடு தென்னாட்டை அடிமையாக்கிவிடும் என்று எதன் அடிப்படையில் இவர்கள் கூறுகிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் தமிழர்களுடைய அச்சத்தைப் பொதுவான ஒரு கொள்கையை மேற்கொள்ளுவதால் நீக்கிவிடலாம்."

—என்று, மக்கள் சபை உறுப்பினரான எம். சத்தியநாராயணா என்பவர், இங்கு நடைபெற்ற இந்தி பிரச்சார இயக்கக் கூட்டத்தில் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"இப்பொழுது இந்தியைக் கற்றுக் கொள்வதற்குத் தமிழர்கள் காட்டும் ஆர்வமும் ஊக்கமும் இந்தியைத் தென்னாட்டில் பரப்பும் முயற்சிக்கு இந்தி எதிர்ப்பு இயக்கத்தால் எவ்விதத் தீமையும் நேராதென்பதைக் காட்டுகின்றது. இந்தி ஆதரவாளர்கள் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்வார்களானால் இப்பொழுது இந்தி வழங்காத பிரதேசங்களில் கூட, பள்ளிக்கூடங்களில் இந்தியையே போதனா மொழியாக ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

"அரசியல் சட்டப்படி நாட்டில் இந்தியைப் பரப்புவது மத்திய அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டபடி 1965-ம் ஆண்டிற்குள் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியை அரசாங்க மொழியாக்க வேண்டுமானால் இப்பொழுது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும்."

சாகுபடியாளர்கள் குடிவார உரிமை

நீடிக்கும் பிரச்சினை தீவிர பரிசீலனையில் இருக்கிறதாம்

சென்னை, சூலை 12—

தஞ்சை குடியானவர் பாதுகாப்புச் சட்டத்தின் 6-வது பிரிவில் கண்டுள்ள 5 ஆண்டுக் காலம் முடிவடைவதை யொட்டி, தஞ்சை மாவட்டத்திலுள்ள பல மிராசுதாரர்கள், தம் சாகுபடிக்காரர்களின் குடிவார பாத்தியதையை ரத்து செய்து 'நோட்டீஸ்' கொடுத்து வருவதாக[illegible]சாகுபடிக்காரர்களின் கு[illegible] பாத்தியதையைப் [illegible]காக்க சர்க்கார் நட[illegible]டுக்கவேண்டும் என்[illegible]சர்க்காருக்கு முறையீடுகள் [illegible]துள்ளனவாம். குறிப்பிட்ட 5-வருட காலத்துக்கு மேலும் சாகுபடிக்காரர்களின் குடி வார உரிமையை நீடிக்கும் பிரச்சினை சர்க்காரின் தீவிர பரிசீலனையில் இருப்பதாக சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஆந்திரா-சென்னை எல்லைத் தக[illegible]

முதன் மந்திரி கோ[illegible] கருத்து

கர்[illegible] 10—

"இத[illegible]டன் உள்ள எல்லைத் தகராறுகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்வதை ஆந்திர சர்க்கார் எதிர்க்கவில்லை; பிரச்சினையை ஒத்திவைத்து காலந்தாழ்த்தவும் விரும்பவில்லை; ஆனால் எல்லைத் தகராறுகளில் ஒரே சீரான - தகுந்த கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதுகிறது.

"மாநிலத்தின் ஒரு பகுதி எல்லைத் தகராறைத் தீர்க்கக் கைக்கொள்ளப்படும் கொள்கையையே இதர பகுதித் தகராறுகளையும் தீர்க்க கைக்கொள்ள வேண்டும்

"சென்னை-ஆந்திரா தகராறுக்கு என்று மட்டுமின்றி, மத்திய சர்க்கார், அகில இந்திய ரீதியில் இந்த விவகாரங்களுக்காக ஒரு சீரான கொள்கையை வகுக்க வேண்டும் என்றும் ஆந்திர சர்க்கார் கருதுகிறது.

'ஆந்திராவிற்கும், சென்னை, ஒரிசா, ம. பி., மைசூர், மராட்டியம் ஆகிய மாநிலங்களுக்குமிடையே உள்ள எல்லைத் தகராறைத் தீர்த்து வைக்க, டில்லி சர்க்கார் ஒரு எல்லைக் குழுவை நியமிக்க வேண்டும் என்று முன்பு கூறியதையே இப்போதும் ஆந்திர சர்க்கார் கூறுகிறது" என்று முதன் மந்திரி கோபால ரெட்டி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

உணவுக் கட்டுப்பாட்டை மீறுவோருக்கு!

கிழக்கு பாகிஸ்தானில் கசையடி தண்டனை

டாக்கா, சூலை 10—

கிழக்கு பாகிஸ்தானில், உணவுக் கட்டுப்பாடு அவசரச் சட்டமொன்றை கவர்னர் பிறப்பித்துள்ளார்.

தானிய நடமாட்ட, விநியோகக் கட்டுப்பாடுகளை மீறுபவர்களுக்கு 10-கசையடிவரையில் தண்டனை கொடுக்கப்படும்.

உணவுக் குற்றங்களைத் துரிதமாக விசாரணை செய்வதற்கு இராணுவ அதிகாரிகளைக்கொண்ட நீதி மன்றங்கள் நிறுவப்படும். அபராதமோ, இரண்டாண்டுகள்வரை சிறைத் தண்டனையோ, அல்லது கசையடி — அபராதம் — சிறைத் தண்டனை ஆகிய மூன்றுமோ விதிக்கப்படலாம்.

காஷ்மீர் சிக்கல்

மீண்டும் ஐ. நா. செல்லும்

பாகிஸ்தான் பிரதமர் அறிவிப்பு

இலண்டன், சூலை 10—

"துரதிருஷ்டவசமாக, நாங்கள், காஷ்மீர் விவகாரத்தில் முடிவு காணமுடியாது போய்விட்டது" என்று பாக். பிரதமர் முகம்மது அலி தெரிவித்திருக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினை ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலுக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'காஷ்மீர் பிரச்சினை என்பது மிக எளிய ஒன்று; அது இதுதான் —காஷ்மீர் மக்கள், ஐ. நா.-வின் ஆதரவில் நடைபெறும் ஒரு வாக்கெடுப்பில்—இந்தியாவுடன் இணைவதா பாகிஸ்தானுடன் இணைவதா —என்ற முடிவைத் தெரிவிக்க அனுமதிக்கப்பட வேண்டும்; அவ்வளவுதான்' என்றும் பிரதமர் அலி விளக்கம் தந்திருக்கிறார்.

சென்னையிலா தொழிற்சாலை?

குறைந்தவருமானமுள்ள குடும்பப் பெண்களுக்கா வேலை வாய்ப்பு?

சென்னை, சூலை 12—

கையினால் தீக்குச்சிகள்செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை பெரம்பூரில் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்

இந்தத் தொழிற்சாலை, ஆண்டிற்கு 5,00,000 குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்பகுதியிலுள்ள குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் பெண்களுக்கு இத்துறையில் வேலையளிக்கப்படுமெனத் தெரிகிறது.

சிறு துறைமுகங்களின் அபிவிருத்தி

சென்னைத் திட்டங்களுக்கு ரூ. 51 லட்சம்

புதுடில்லி, சூலை 10—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், சிறு துறைமுகங்களின் அபிவிருத்திக்காக ரூ 162 17 இலட்சம் செலவிடுவது என்ற திட்டம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

சென்னை மாநிலத்தில் சிறு துறைமுகங்களின் அபிவிருத்திக்காக ரூ. 46 29 இலட்சம் வரை செலவிட அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஆந்திர மாநிலத்தின் திட்டங்களுக்காக, ரூ. 28·85 இலட்சமும், திரு-கொச்சி திட்டங்களுக்காக ரூ. 28 50 இலட்சமும் செலவிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

ஏகபோக உரிமைக்கு எதிர்ப்பு?

ஏற்றுமதி வர்த்தகத் துறையை அரசாங்கம் மேற்கொள்ளும்?

"ஏற்றுமதி வர்த்தகத் துறையில், தனிப்பட்ட ஏற்றுமதியாளர்கள், அநேகமாக தங்கள் பொருள்களையே நிரப்பி அனுப்புவதைக் காண்கிறேன்; ஒருவிதமான ஏகபோக மனப் போக்கையே இது காட்டுகிறது; இம்மனப்போக்கு தவிர்க்க முடியாத ஒன்று என்றால், தனியார் துறையிடம் இதை விடுவதைவிட, அரசாங்கம் எடுத்துக்கொள்வதே நல்லது," என்று மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி சென்னையில் குறிப்பிட்டுள்ளார்.

மாற்றப்படும் பகுதிகள்

ஆறு மாதத்திற்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்

திருவனந்தபுரம், சூலை 10—

சென்னை மாநிலத்திலிருந்து கேரளத்திற்கும், கேரளத்திலிருந்து சென்னைக்கும் மாற்றப்பட இருக்கும் பகுதிகள் சம்பந்தமாக 6 மாதத்திற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இரு மாநில சர்க்கார்களும் தயாரித்து அனுப்புமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இலாகா அதிகாரிகளுக்கு தி. கொ. சர்க்கார் உத்தரவு

திருவனந்தபுரம், சூலை 11—

சென்னையுடன் இணைக்கப்பட இருக்கும் தென் திருவிதாங்கூர் தாலுகா மக்களுக்கு சர்க்கார் நியாயம் வழங்கவில்லை என்ற சந்தேகம் சிறிதுகூட ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டுமென்று எல்லா இலாகா அதிகாரிகளுக்கும் திரு-கொச்சி மாநில சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறதாம்.

மருத்துவமனைக்கு வானொலி

கொழும்பு நகர பொது மருத்துவ மனையில் வானொலிச் சாதனங்களை அமைக்கும் பொறுப்பை ஓர் பிரிட்டிஷ் நிறுவனம் ஏற்றுக் கொண்டிருக்கிறது; இந்த வைத்தியசாலையில் 320 படுக்கைகள் உண்டு; நோயாளிகளுக்கு சங்கீத விருந்தளித்து உற்சாகமூட்ட ஒவ்வொரு படுக்கையிலும் 'ஹெட் போன்' (காதில் மாட்டிக்கொள்ளும் ஒலிக்கருவி) அமைக்கப்படும்; படுத்துக்கொண்டே இருக்கும் நோயாளிகள் தலையணைக்குக்கீழ் அமைக்கப்படும் ஒலிபெருக்கியால் சங்கீதத்தை அனுபவிக்கலாம்; இவற்றால் வைத்தியசாலையின் அமைதி கெடாது; இசைத்தட்டுக்களும், வானொலி நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்படும் என்று தெரியவருகிறது.

பிரிட்டனிலுள்ள வைத்தியசாலைகளில் இந்த வசதியுண்டு. கீழ்த்திசை நாடுகளில் விரிவான முறையில் கொழும்பில்தான் முதன்முதலில் இந்த வசதிக்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

1955-ம் வருடம் இந்தியாவில் 40·9 லட்சம் ரூபாய் மதிப்புள்ள குளிர்பதவச் சாதனங்கள் தயாரிக்கப்பட்டன.

எஸ். எஸ். ராசேந்திரன் குழுவிற்குப் பாராட்டு

மேலப்பாளையம், சூன் 27—

27—6—56மாலை திருநெல்வேலியை அடுத்த மேலப்பாளையம் மஜீத் மாணவர் மன்றத்தின் சார்பில், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்—நடிக மணி டி. வி நாராயணசாமி ஆகியோருக்கு தேநீர் விருந்தளித்துப் பாராட்டு தெரிவித்தனர். பாராட்டுதலுக்குத் தோழர்கள் நன்றி தெரிவித்துப் பேசினர்.

* * *

நெல்லை பொருட்காட்சியில்

நெல்லை தேசியப் பொருட்காட்சியில் 26-6-56, 27-6-56 இரு நாட்களில், 'மணி மகுடம்,' நாடகமும் 'புது வெள்ளம்' நாடகமும் இராசேந்திரன் நாடக மன்றத்தினரால் நடைபெற்றன. நாடகங்கள் மிகச் சிறப்பான முறையில் நடந்து மக்கள் ஆதரவு நிறையக் கிடைத்ததையுணர்ந்த பொருட்காட்சிக் குழுவினர், மீண்டும் 'மணிமகுடம்' நாடகத்தை 28-6-56-லும் நடைபெற ஏற்பாடு செய்தனர். நாடக முடிவில் நெல்லை நகரசபைத் தலைவர் திரு. ப. இராமசாமி அவர்கள் நாடகக் குழுவினரின் நடிப்புப் புலமையையும் நாடக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களின் எழுத்துத் திறமையையும் பாராட்டிப் பேசினார்.

அனுதாபம்

1—7—56 மாலை 5½ மணியளவில், சந்தைப் புதுப்பாளையம் தி. மு. கழகப் பொருளாளர் தோழர் வி. கே. இராசாராம் அவர்கள் சேலத்திற்கு 'லாரி'யில் அரிசி ஏற்றிக்கொண்டு சென்றபோழ்து மஞ்சவாடி கணவாய் என்ற இடத்தில் எதிர்பாராத விபத்துக்குள்ளாகி அவ்விடத்திலேயே இயற்கை எய்தியதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம். தோழர் இராசாராம் அவர்களுக்கு 13—7—56ல் திருமணம் நிகழவிருந்தது. அவருடைய பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்திற்கு, சந்தைப் புதுப்பாளையம் தி. மு கழகம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறது.

* * *

சுயமரியாதை இயக்கப்பற்றுடையவரும், மதுரையில் பிரபல வியாபாரியுமான திரு கா. அருணாசல (நாடார்) அவர்கள் இயற்கையெய்திய செய்தியை வருத்தத்துடன் அறிவிக்கிறோம். அவருடைய குடும்பத்தினருக்கு இராமநாயக்கன்பட்டி தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

விரம் பேசும் விணர்கள் வெட்கப்படட்டும்!

இப்போது வல்லரசுகள் தயாரித்து வரும் அளவுள்ள அழிவுச் சக்தியைப் பரப்பும் அணுகுண்டுகள் பதினாயிரம் குண்டு வெடிக்கப்பட்டால எப்படியிருக்குமோ அந்த அளவுச் சக்தியை யூஜியன் கடலிலுள்ள காண்டோரின தீவில் ஏற்பட்ட நிலநடுக்கம் வெளியாக்கி இருக்கிறதென, இத்தாலிய தேசீய பௌதிகக் கழகம் தெரிவிக்கிறது.

சென்னை 16-வது வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம்

14—7—56 மாலை 8 மணிக்கு, கழகப் பணிமனையில், கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

14—7—56 இரவு 7 மணிக்கு, சென்னை 27-வது வட்ட 33, ஏலா கந்தப்பன் வீதியிலுள்ள அறிவியக்க மன்ற அறையில் தோழர் ஆர். என். பத்மநாபன் தலைமையில், 'வருகிற தேர்தலில் நமது கடமை' எனும் பொருள் குறித்து, ஆ. ருக்மாங்கதன், மு. வ. வேலன், தனபால், அன்புமணி, ஆண்டவன், இன்னும் பலர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

பல்லாவரம்:
கடை வீதியில்
14-7-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர் :
மு. பச்சையப்பன்
பேசுவோர்:
அண்ணா
காஞ்சி-கல்யாணசுந்தரம்

மாலை 5-30 மணிக்கு, தோழர் நடேசன் குழுவினர் இன்னிசை வழங்குவர்.

★

அறந்தாங்கி:
வ. உ. சி. திடல்
14—7—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
மெ. தியாகராசன்
பேசுபவர் :
கி. மனோகரன்

★

வைத்தீசுவரன்கோயில்

13—7—56 மாலை 6 மணிக்கு, வைத்தீசுவரன்கோயில் மேலவீதியில், அவ்வூர் தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், என். கிட்டப்பா, கே. எஸ். சௌந்தரராசன் ஆகியோர் பேசுவர்.

பொதுசெயலாளருக்கு வரவேற்பு

18—7—56-ல், திருக்களாச்சேரிக்கு வரும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, திருக்களாச்சேரி பஞ்சாயத்துப் போர்டு, அன்று மாலை 4 மணிக்கு பஞ்சாயத்துப் பணிமனையில் வரவேற்பு அளிக்க முடிவு செய்துள்ளது.

வெறியர் மட்டுமல்ல - நயவஞ்சகருங்கூட!

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, இரண்டாம் முறையாகவும் இளைஞர்களின் 'கிடுக்கித் தாக்குதல்'களிலிருந்து தன்னைச் சமாளித்துக்கொண்டிருக்கிறார்.

காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டை முடித்துக்கொண்டு இலங்கைப் பயணமாவதற்காக விமான நிலையத்தில் வருவதை எதிர்நோக்கி 50 பேர் கொண்ட மாணவர் குழாம் ஒன்று லண்டன் விமான நிலையத்தில் காத்திருந்திருக்கிறது.

'வகுப்புத் துவேஷ இரத்த வெள்ளத்தை நிறுத்து'; 'சம அந்தஸ்து கொடு — இன்றேல் இலங்கை பிரிக்கப்படும்' என்ற வாசகங்களடங்கிய தட்டிகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

துடிதுடிப்பு மிக்க மாணவர்கள் அடங்கிய அந்தக் குழு, பண்டாரநாயகாவைக் காணாமலே திரும்ப வேண்டியதாகிவிட்டது வழக்கமாக புழக்கத்தில் இருக்கும் வாயிற்படியிலில்லாமல் வேறொரு வாயிலின் 150 கெஜ தூரத்துக்கு முன்னாலேயே அவருடைய கார் நிறுத்தப்பட்டு பாதுகாப்புடன் விமானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பண்டாரநாயகாவை ஏற்றிக்கொண்டு விமானம் உயரக் கிளம்பிய பிறகுதான், தாங்கள் ஏமாற்றப்பட்டிருப்பதை மாணவர்கள் உணர்ந்தனர்!

ஏமாற்றத்தினால் ஏற்பட்ட உள்ளப் பதைப்புடன் ஒரு மாணவன் தன்னுடைய கையிலிருந்த தட்டியைக் கீழே எறிந்துவிட்டுச் சொன்னான் :—

'நாங்கள் விமான நிலையத்தில் இருந்தால் வந்து சந்திப்பதாகப் பண்டாரநாயகா எங்களிடம் தெரிவித்திருந்தார்; அவருடைய வார்த்தையைக் காப்பாற்றுவார் என்று எதிர்பார்த்தோம்.'

[illegible] கலந்துகொள்ள இலண்டனுக்குப் போன நாளிலும் இதேபோல் [illegible]ாரநாயகா தப்பிப் போனது [illegible] தக்கது.

முன்னாள் மேயர் சிலைமீது கல்வீச்சு

பம்பாய், சூலை 11—

சமீபத்தில் இங்கு நடைபெற்ற அ. இ. கா. க. கூட்டத்தின்போது காங்கிரஸ் தலைவர் தேபரால் பம்பாய் நகர சபையில் திறந்துவைக்கப்பட்ட முன்னாள் மேயர் எஸ். கே. பட்டீல் சிலைமீது, ஒரு மில் தொழிலாளி கல்வீசி சிலையைச் சேதப்படுத்தியதாகவும், சிப்பந்திகள் அத்தொழிலாளியைப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்ததாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

சென்னை துறைமுகம் விரிவடைகிறது

ரூ. 10 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டு, சென்னை துறைமுகத்தை விரிவாக்கும் வேலை முமுரமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது; இதுவரையில் ரூ. 1½-கோடி செலவழிக்கப்பட்டு விட்டது; இவ்வாண்டு முடிவுக்குள் மேலும் ரூ. 1—கோடி செலவாகும்.

ரூ. 75-இலட்சம் செலவில் ஊழியர்களுக்கு சுமார் 500 குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு, தண்டையார்பேட்டையில் 30-ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் சனாதனத்திற்கு வேட்டு

கோவிலுக்குள் நுழைய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், சூலை 10—

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துக் கோவில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் முதன் முதலாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

சாதிமுறைக் கேட்டின் விளைவுகளுள் ஒன்றான, 'தாழ்த்தப்பட்டோர் கோவிலுக்குள் நுழையக் கூடாது' என்ற தடை உடைபட்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பல இந்துக் கோவில்களுக்கும் சென்று வழிபட்டிருக்கின்றனர்.

முன்பு இந்தியாவில் இலங்கையின் தூதுவராகவிருந்த சி. குமாரசுவாமி, முதல் கோஷ்டி ஒன்றிற்குத் தலைமை தாங்கி, நகரின் பிரதான கோவில்கள் மூன்றிற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

கோவில் நுழைவு இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் தோழர் குமாரசாமி, யாழ்ப்பாணத்தில் தடை உடைபட்டதைப் போல தீவின் இதர பகுதிகளிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுள் நுழைய அனுமதிக்கப்படுவர் என்று தான் நம்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

தி. மு. கழகம்தான் சரியான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிமார்களோ பேசுகிறார்களென்றால், ஏழே முக்கால் பேர்களோ, ஒன்பதேகால்பேர்களோதான் கூடுவது வழக்கம். அந்த மண்டபத்தில், அண்ணா பேசுகிறார் என்பதால்தான், அன்று ஆயிரக்கணக்கான மக்கள் கூடிவிட்டனர்.

"எங்காவது பொது மைதானத்தில் கூட்டம் ஏற்பாடாகியிருந்தால், கூட்டம் விவகாரத்திற்குரியதாக ஆகியே இருக்காது. இப்படி பல்லாயிரம்பேர் கூடிவிட்டதைக் கண்டதுமே, 'இவர்கள் எல்லாம் காலித்தனம் செய்யவே வந்திருக்கிறார்கள்' என்று எண்ணிக் கொண்டார்கள் போலும்! ஏனெனில், இவர்கள் நல்ல கூட்டங்களைக் கண்டே ஆண்டுகள் பல ஆகின்றன!

"கூட்டத்திற்கு அண்ணா அவர்கள் வந்து சேர்ந்தார்; வந்தபோது, மக்கள், பேராரவாரம் செய்து வரவேற்றிருக்கின்றனர்.

"அண்ணா அவர்களைக் கண்டதும், பேராரவாரம் செய்து கைதட்டி வரவேற்பது என்பது, இன்று தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற ஒரு பொதுவான நிலை; இது, ராஜாஜி மண்டபக் கூட்டத்தில் மட்டும் நிகழுவது அல்ல!

"மண்டபத்திற்குள் எத்தனையோ நெருக்கடி—கஷ்டங்களுக்கிடையேயும், மக்கள் காத்துக் கொண்டிருந்ததற்குக் காரணமே, அண்ணா அவர்கள் பேசுவார்; அவரது கருத்தைக் கேட்டுவிட்டுப் போகலாம்' என்பதற்காகத்தான்!

"இந்த நிலையில், ஒலி பெருக்கி வேறு—சர்க்காரைப் போலவே—சரியாக வேலை செய்யவில்லை! இந்த சம்பவத்தைக் காலித்தனம் என்று எப்படிச் சொல்லமுடியும்?

"கூட்டத்திலிருந்து கவர்னரும், காமராசரும், பக்தவத்சலமும், அண்ணா பேசியதும் எழுந்து சென்றார்கள் — என்றுதான், செய்தி வந்தது.

"கூட்டம் காலித்தனம் செய்ய வந்திருந்த கூட்டம் என்றால், அவர்கள் எல்லாம் எழுந்து சென்றார்கள் என்று செய்தி வரமுடியுமா? எடுத்துக்கொண்டு செல்லப்பட்டார்கள்' என்றல்லவா செய்தி வெளிவந்திருக்கும்?

"கைதட்டி ஆரவாரம் செய்வதே காலித்தனம் என்று சொல்லப்படுமானால், அந்தக் காலித்தனத்திற்கு ஏகபோக உரிமையாளர்களாக நாங்கள் இருப்பதிலே பெருமைப்படுகிறோம்.

"ஆனால், காலித்தனம் என்றால், உண்மையில் என்ன என்பதற்கு விளக்கம் வேண்டுமா? காமராசருக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தில் [illegible] என்ற ஊருக்கு எங்கள் பொது[illegible]ளராக இருக்கிற நெடுஞ்செழியன் [illegible] சில ஆண்டுகளுக்கு முன் சென்றிருந்தபோது, காமராசரின் சீடர்களில் ஒருவரின் தலைமையில் சிலர்கூடி, நெடுஞ்செழியன் அவர்களை, கம்புதடி கொண்டு தாக்கிக் கொல்லவும், அரிவாள் கொண்டு கூட்டத்தினரைத் தாக்கிக் கொல்லவுமாக சதி செய்து, கூட்டத்தைக் கலைக்க முற்பட்டார்களே, அந்தச் சம்பவத்திற்குத்தான் 'காலித்தனம்' என்று பெயர்; கைதட்டலும் வாழ்த்தும் காலித்தனமாகமாட்டா.

'ஏன் காமராசர், இப்படி கழகம் பற்றித் தவறாக மக்களிடத்தில் எடுத்துச்சொல்லி, கழகத்தை மாசுபடுத்த நினைக்கவேண்டும்?'

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

பர்மாவிற்கு நீண்டகாலக் கடன்

அமெரிக்கா வழங்குகிறது

ரங்கூன், சூலை 10—

பர்மாவிற்கு அமெரிக்க சர்க்கார் வழங்குவதாக அறிவித்துள்ள 20 கோடி முதல் 30 கோடி டாலர் வரையுள்ள நீண்டகாலக் கடன் குறித்து பர்மா சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறதாம்.

'சுமார் ரூ. 14,28,00,000 வரை கிடைக்கும் இந்தக் கடனுக்கு நியாயமான வட்டி வாங்கப்படும்' [illegible] பிரிட்டிஷ் இதழ் ஒன்று [illegible]விக்கிறது.

மேற்கு ஜெர்மனி எண்ணெய் நிபுணர் குழு

நவம்பரில் இந்தியா வருகிறது

புதுடில்லி, சூலை 10—

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த எண்ணெய் நிபுணர் குழு ஒன்று இந்தியாவிற்கு நவம்பர் திங்களில் வருமாம்.

இந்தக் குழு, இந்தியாவில் எண்ணெய் உற்பத்தி பற்றி ஆராய்ந்து இந்திய சர்க்காருக்கு யோசனை கூறுமாம்.

மூன்று மாதம் இந்தியாவில் தங்கும் இந்தக் குழுவில் மூன்று நிபுணர்கள் இருப்பார்களாம்.

இந்தியா வந்துபோகவும், சம்பளம்—படி முதலிய செலவுகளையும் மேற்கு ஜெர்மன் சர்க்காரே ஏற்றுக் கொள்ளும் என்றும், இந்தியாவிற்குள் ஆகும் சுற்றுப்பிரயாணச் செலவை மட்டும் இந்திய சர்க்கார் ஏற்கும் என்றும் தெரியவருகிறது.

தங்க வயல்!

ஐரோப்பாவிலேயே செழிப்புள்ளதென்று விவரிக்கக்கூடிய அளவில், மத்திய பிரான்சில் தங்க வயல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்!

உணவு மந்திரியின் துடுக்குத்தனம்!

மேற்கு வங்க சட்டசபையில் எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

கல்கத்தா, சூலை 11—

மேற்கு வங்க சட்டசபையில் எதிர்க்கட்சியினர் நேற்று வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

உணவு மந்திரி பி. சி. சென் என்பார், மாநிலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றம் குறித்துச் சபையில் பேசும் போது குறிப்பிட்ட சில வாசகங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே அவர்கள், நாலு மணி நேரக் கூட்டத்தின் இறுதியில் வெளிநடப்பு செய்திருக்கின்றனர். எதிர்க்கட்சியினரின் இந்த வெளிநடப்பிற்கு முன்பாகக் காங்கிரசாரும், எதிர்க்கட்சியினரும் சபைக்குள்ளாகவே ஒருவருக்கு ஒருவர் குற்றஞ் சுமத்திக்கொண்டு, பெரும் கூச்சல் எழுப்பினராம்.

வெளிநடப்பு நடைபெற்ற உடனேயே, சபைத் தலைவர் சபையை ஒத்திவைத்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு கட்சித் தலைவரான ஜோதி பாசு என்பார், 20, 30 மைல் தொலைவிலுள்ளவர்கள் அடங்கிய பட்டினிப் பட்டாளம் ஒன்று சட்டசபையை நோக்கி வந்துகொண்டிருப்பதாகக் கூறினார்.

உடனே உணவு மந்திரி சென் எழுந்து, பல நாட்களாகப் பட்டினி கிடப்போர் எப்படி, நகரத்திற்கு பல மைல் தொலைவிலிருந்து கால்நடையாகவே வரமுடியும் என்று எனக்குப் புரியவில்லை என்று கூறினாராம்!

உடனே தோழர் பாசு எழுந்து, மந்திரி இதுபோலப் பேசுவதை ஆட்சேபித்ததுடன், 'மக்களுடைய துயரங்களை, நகைச்சுவைப் பொருளாக ஆக்கக்கூடாது' என்றும் இடித்துரைத்து, 'எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து, ஊர்வலமாக வந்துகொண்டிருக்கும் பட்டினிப் பட்டாளத்தைச் சந்திக்க மந்திரியும் வருமாறு அழைக்கிறேன்' என்றும் கூறியிருக்கிறார்.

இந்த பதிலை சபை ஆரவாரத்துடன் வரவேற்றிருக்கிறது. இது கண்டு பொறாத காங்கிரசார், கூச்சல் எழுப்பியதைத்தொடர்ந்துதான், சபையில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

பஞ்சாபில் இந்துக்கள் நடத்திய பொது வேலைநிறுத்தம்

ஒரு சம்பவத்தில் 15 பேருக்குக் காயம்!

ஓசியார்பூரில் விசாரணை நடத்தக் கோரிக்கை

அமிர்தசரஸ், சூலை 11—

ஓசியார்பூரில் கடந்த சூன் 17-ந் தேதி நடைபெற்ற சம்பவங்கள் குறித்து நீதிமன்ற விசாரணை நடத்த வேண்டும் என்ற மகா பஞ்சாப் சமிதியின் கோரிக்கையை ஆதரித்தும், நாசந் என்ற பஞ்சாப் பியோபார் மண்டலின் தலைவரைக் கைது செய்ததை எதிர்த்தும், பஞ்சாப் பியோபார் மண்டல் விடுத்திருந்த வேண்டுகோளுக்கு இணங்க, பஞ்சாபில் உள்ள இந்துக்கள் இன்று அர்த்தால் அனுஷ்டித்திருக்கின்றனர்.

இந்துக்கள் நடத்தும் கடைகள், வணிக நிலையங்கள், ஓட்டல்கள் எல்லாம் பஞ்சாபின் பல நகரங்களிலும் மூடப்பட்டிருக்கின்றன.

அமிர்தசரசிலும் 'அர்த்தால்' நடைபெற்றிருக்கிறது.

பள்ளி ஒன்றை மூடுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியபோது, நான்கு ஆசிரியர்கள் உட்பட 15 பேர் காயம்பட்டனர் என்பதைத் தவிர, வேறேதும் சம்பவங்கள் இன்றி அமைதியாகவே அர்த்தால் நடைபெற்றிருக்கிறது.

அமிர்தசரஸ், அம்பாலா, லூதியானா முதலிய நகரங்களில் இந்துக்கள் ஒருமுகமாக அர்த்தாலில் ஈடுபட்டு, ஊர்வலம், பொதுக்கூட்டம் முதலியன நடத்தியிருக்கின்றனர்.

அம்பர் சர்க்காவில் நூற்ற நூலுக்கும், பழைய கைராட்டை நூலுக்கும் ஒரே விலை நிர்ணயிக்க வேண்டுமென்று அ. இ. காதி—கிராமக் கைத்தொழில் கழக விலை நிர்ணயக் குழு முடிவு செய்திருக்கிறதாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.